மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு அரசு அதிகபட்சமாக செலவு செய்தாலும் கூட, சிறந்த பயிற்சி பெற்ற நிபுணத்துவம் உடைய டாக்டர்களை உற்பத்தி செய்தும், இங்கே அவர்களுக்கு வேலையில்லாத பிரச்சினை இருக்கிறபடியால், வெளிநாடுகளுக்கு அவர்கள் செல்ல அனுமதிப்பதன் மூலம் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. அவர்களுக்கு செலவு செய்த பணத்தைத் திரும்பப் பெறுகின்ற வகையில், வெளிநாடுகளில் இருக்கின்ற நமது டாக்டர்கள் அரசுக்கு ஆண்டொன்றுக்கு இவ்வளவு தொகை கொடுக்கவேண்டுமென்ற நிலையை உருவாக்கி அதைச் சரி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்கு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அது சரியாக இருக்காது, அவர்களே வெளிநாடுகளுக்குப் போய் சிரமப்பட்டுத்தான் சம்பாதிக்கிறார்கள், எனவே அவர்கள் தலையில் கை வைப்பது நியாயமாக இருக்காது என்று கருதுகிறேன். நியாயமாகப் போடப்பட்டு முறைப்படி அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய வரிகளை ஒழுங்காகக் கட்டினாலே இந்தப் பிரச்சினை நமக்கு இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 492, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

462—

சதுப்பு நிலத்தில் சமூகக் காடுகள் வளர்ப்பு.

*5825—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேயிலைத் தோட்டங்களிலுள்ள சதுப்பு நிலத்தில் சமூகக்காடுகள் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 3]

தேயிலைத் தோட்டங்களிலுள்ள சதுப்பு நிலத்தில் சமூகக் காடுகள் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை,

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுடைய கொள்கை முடிவாக எடுத்து, ரிசர்வ் பாரஸ்டுக்குப் பக்கத்தில் உள்ள தனியார் தொடர்புடைய இடங்களை சமன்படுத்தி, சமூகக்காடுகள், குறிப்பாக ஈக் ராண்டிஸ் போன்ற மரங்களை நட்டால் அங்கே அதிகமாக மழையும் கிடைக்கும், அது மட்டுமல்லாமல், சுற்றுப் பயணிகளைக் கவரும் வகையிலும் அது அமையும், எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வருவாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுப்பு நிலக்காடுகள் என்பது மழைக்காலங்களில் நீரைத் தேக்கி வைப்பதற்கும் வனவிலங்குகள் அதை உட்கொள்வதற்கும் பயன்படுகிறது ஆகவே அப்படி தேங்கியுள்ள தண்ணீர் நிறைந்த பகுதிகளை சமன்டடுத்தி தேக்கு மரங்களை நடுவது முடியாத ஒன்று. எப்போதும் அங்கே சேறு இருப்பதால் தேக்கு போன்ற மரங்கள் வளரமுடியாது என்பதை தெரிவித்துக் கொள் கிறேன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் அதிகமாக இருக்கின்ற காலங்களில் வாய்க்கால்கள் மூலம் அதிகப்படியான தண்ணீரை வெளி யேற்றிவிட்டு, எஞ்சிய பகுதியில் மரங்களை நட்டால் சிறப் பாக வளரும் என்று கருதப்படுவதால், அமைச்சர் இதை பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: கால் வாய்கள் வெட்டி தண்ணீரை வெளியேற்றலாம் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், மலைப் பகுதி களில் சதுப்பு நிலங்களில்தான் மழைத் தண்ணீர் தேங்கும், அந்த நீரின் ஆதாரத்தில்தான் மற்ற மரங்களை நாம் வளர்க்கமுடியும். ஆகவே உறுப்பினர் அவர்கள் குறிப் பிடுவது, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் அது கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, கே, முனிவெங் கடப்பன்,

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் ஏரிகளின் கரைகளில் மரங்களை நட்டுக் கொண்டு வருகிறோம். அதே மாதிரி, அணைகள் பகுதியிலும் இத்திட்டத்தின் கீழ் மரங்களை நட்டால் கோடிக்கணக்கான மரங்களை நாம் உற்பத்தி செய்ய முடியும். ஆகவே அணைகளின் ஓரங்களில் மரங்களை நட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுப்பு நிலங்கள் போல அணைகள் என்பதும் தண்ணீர் தேங்குகின்ற இடம்தான். அதன் கரையோரப் பகுதிகளில் மரங்கள் நட வேண்டுமென்றால் அதுபற்றி பொதுப்பணித் துறையிடம் அனுமதி பெற வேண்டும். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பற்றி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரோடு அல்லது அந்தத் துறையோடு கலந்து பேசி நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டங்களில் உள்ள சதுப்பு நிலக் காடுகள் என்பது மலைகள் இருபுறம் சந்திக்கும் இடத்தில் உள்ள சிறு நிலப் பரப்பாகும். அங்கே நீர் எப்போதும் தேக்கி வைக்கப்படுவதில்லை, ஏனென்றால் அந்த நீர் வடிந்து விடுகிறது. அந்த சரிவுகளில் சதுப்பு நிலக்காடுகளின் ஓரங்களில் மரங்களை நட்டால் மழை பெய்ய வசதியாக இருக்கும், மேலும் நீர்பிடிப்பு குறையாமல் இருக்கும், ஆகவே அந்த சதுப்பு நிலக் காடுகளில் மரம் வளர்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சதுப்பு நிலம் என்பது ஏரிகளாக இருக்கின்ற இடம், அதிலே தண்ணீர் இருக்கிறதோ இல்லையோ. சேறாக இருந்தாலும் கூட அதிலே மரங்களை நட்டு வளர்க்க முடியாது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஓரப் பகுதியிலே இருக்கின்ற இடங்களிலே வளர்க்க வேண்டுமானால் அரசு பரிசீலிக்கும்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 463, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

463—

போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள் விற்பனை,

*6008 திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள் என்ன நெறிமுறைகளின்படி பயனற்றவை என தீர்மானிக்கப்படுகிறது?

(ஆ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் பயனற்றவை என தீர்மானிக்கப்பட்டு 1988–89 முதல் 1990–91 ஜனவரி முடிய அறிவிக்கப்பட்ட பேருந்துகள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவ்வாறு தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பேருந்துகள் எவ்வகையில் விற்பனை செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர பிற போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைப் பொருத்த வரையில் அவைகள் மொத்தமாக 6 ஆண்டுக் காலம் ஓடியிருந்தால் அல்லது ஏழு இலட்சம் கி.மீ. ஓடியிருந்தால்—இதிலே எந்த நிபந்தனையை பூர்த்தி செய்திருந்தாலும் அத்தகைய பேருந்துகள் கண்டெம் செய்ய கூடிய நிலையை அடைந்தன என தீர்மானிக்கப்படுகிறது, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளைப் பொறுத்த வரையில் ஏழு இலட்சம் கி.மீ. ஓடியிருந்தாலும் அல்லது மூன்றாண்டுகள் பயன்படுத்தினாலும் அவற்றைக் கண்டெம் செய்யக் கூடிய நிலை அடைந்ததாக தீர்மானிக்கப்படுகிறது,

(ஆ) 1988–89 முதல் 1990–91 வரையில் மொத்தமாக 165 பேருந்துகள் இவ்வாறு பயனற்றுப் போனதாக—கண்டெம் செய்யப்பட்டதாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் அறிவிக்கப்பட்டன.